# திருமறை ஆசான்


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 10 அக்டோபர் 2009

## 12 வது வேதாகம கருத்தரங்கம் - காங்கயம்.




கருத்தரங்கில் பாடல் குழுவினர்



Bro. JERRY BATES & BENNY MARTIN

வேதாகமக் கருத்தரங்கில் கருத்தாளர்கள்

Bro. J. பிக்கின்ஸ்
Bro. K. பாஸ்கர்
Bro. பிரபுதாஸ் மல்லி
Bro. K.M. பிலிப்
Bro. E.Z.S. ஏசையன்
Bro. P. பால்ராஜ்

Bro. E.K. நத்தானியேல்

Bro. R. பிலிப் பாஸ்கர்

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள் !!

# காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும் எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

# 12 - வது வேதாகம கருத்தரங்கம்

# TWELFTH ANNUAL BIBLE LECTURESHIP

கடந்த அக்டோபர் 2,3-2009 ஆகிய தேதிகளில், காங்கயத்தில் நடைபெற்ற வேதாகம கருத்தரங்கிற்கு தமிழகத்தின் 46 நகரங்கள் மற்றும் மாநகரங்களிலிருந்து 56 பிராந்திய சபைகளைச் சார்ந்த விசுவாசிகளும், "திருமறை ஆசான்" வாசகர்களும், "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்களும் பெருந்திரளாக வருகைதந்து, ஆன்மீக அறிவில் பயன்பெற்று பக்தியில் விருத்தியடைந்து திரும்பினர்.

இக்கருத்தரங்கம் எல்லா வகையிலும் தேவநாம மகிமைக்காய் நடந்தேறும்படி ஊக்கமாய் ஜெபித்த, உற்சாகமாய்க் கொடுத்த உங்கள் ஒவ்வொருவருக்கும் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன். பரலோகத்தின் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ! ஆமென்.

- ஆசிரியர்.

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பது எப்படி ? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. "விசுவாசம் மாத்திரம்" என்பதின் மற்றுமொரு பார்வை ........ 22
7. சபையின் ஊழியம் ........ 25
8. கேள்வி பதில் ........ 26
9. கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியின் ஊழியம் ........ 28
10. பவுல் கைதி செய்யப்படுதல் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 OCTOBER - 2009 Issue - 10


ஆசிரியர் உரை

## ஏன் இந்த மாற்றம்?

மானிடர்களாகிய நாம் வாழும் இந்த உலகம் மாற்றத்திற்குப் பெயர் போனது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஏனெனில், உலகில் மாற்றமா அல்லது மாற்றமே உலகமா என்று சொல்லுமளவுக்கு மாற்றங்கள் துரித கதியில் நடந்து, மிக முக்கியமான இடத்தைப் பெற்றுவிட்டது. தினம் தவறாமல் ஏதாவதொரு மாற்றம் நடந்து கொண்டுள்ளது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அவ்வப்பொழுது நிகழும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு, அவைகளை சீரணிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். எனக்கு மாற்றமே பிடிக்காது, ஆகவே, நான் இவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என யாரும் ஒதுங்க முடியாது.

இப்படி நம்மைச் சுற்றிலும் ஏற்படும் மாற்றங்களை நாம் அப்படியே கவனித்துப் பார்த்தால், அவைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை, 1. ஏற்படும் மாற்றங்கள். 2. ஏற்படுத்தப்படும் மாற்றங்கள். இதில், முதலாவது வகை தானாக வும், இரண்டாவது வகை பிறராலும் ஏற்படும். இக்கருத்தை இன்னும் கொஞ்சம் உற்றுப்பார்த்தால், தானாக ஏற்படும் இயற்கை மாற்றங்களுக்கு உலகத்தைப் படைத்த தேவன் காரணமாகவும், பிறரால் ஏற்படும் மாற்றங்களுக்கு, உலகிலிருக்கும்படி படைக்கப்பட்ட மனிதன் காரணமாகவும் இருக்கிறான் என்பது தெரியும். முதல் வகை மாற்றத்திற்கு உதாரணமாக காலம், மற்றும் பருவ நிலைகளில் ஏற்படும் மாற்றங்களையும், இரண்டாவதற்கு ஆதாரமாக, சமூகம் மற்றும் ஆன்மீக நிலைகளில் ஏற்படும் மாற்றங்களையும் குறிப்பிடலாம்.

தேவ ஞானத்தின்படியாக நிகழும் அபார மாற்றங்களுக்கு, அதன் தன்மைக்கேற்ற, அர்த்தமுள்ள விளக்கங்களை நாம் அப்படியே தரமுடியாததாகையால், அவைகளைக் கொஞ்சம் அப்படியே ஒதுக்கிவிட்டு, மாந்த அறிவின்படியாக நிகழும் மாற்றங்களை மாத்திரம் நாம் கவனிப்போம். பொதுவாகவே, மனித ஞானத்தின்படியாக ஏற்படுத்தப்படும் எல்லா மாற்றங் களுக்கும், ஒரு வலுவான அடிப்படைக் காரணமிருக்கும். அக் காரணங்கள், சில சமயங்களில் வெளியே தெரியும். பல சமயங் களில் வெளியே தெரியாது. ஆனால், காரணமில்லாது மாற்றங் கள் நிகழாது.

சரி, நம்மைப் படைத்த தேவனுடைய சித்தம் செய்ய விரும்பும் பிள்ளைகளாகிய நாம், ஆன்மீக காரியங்களுக்கு, அத்துமீறிய முக்கியத்துவம் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளதால், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் ஆன்மீக வாழ் வில், அவர்களின் பக்தி உணர்வில் ஏற்பட்ட ஒரு மாற்றம் குறித் தும், அதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது குறித்தும் இப்பொழுது பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில், கிட்டத்தட்ட இயேசு கிறிஸ்துவுக்கு இணையாக மதிக்கப்பட்ட மாபெரும் மனிதனா கிய மோசே, தனது 120வது வயதில் மரித்து, கர்த்தரால் அடக்கம் செய்யப்பட்ட பிறகு (உபா. 34:6) பெருந்திரளாக இருந்த இஸ்ர வேல் ஜனங்களை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை, தேவ அங்கீகாரத்தோடு யோசுவா ஏற்றுக்கொண்டான் என்பது நமக்குத் தெரியும் (யோசுவா 1ம் அதிகாரம்) இந்த யோசுவா வீரத்திலும், தீரத்திலும், பக்தியிலும், பணிவிலும், உறுதியிலும் தான் மோசே யுக்கு சற்றும் சளைத்தவனல்ல என்பதை எல்லா வகையிலும், செயல்படுத்திக்காட்டினதுமல்லாமல், தலைமைப் பண்பில் தான் மோசேயைக் காட்டிலும் பக்குவப்பட்டவன் என்பதையும் தனது சீரான வழிநடத்துதல் மூலம் நிரூபித்துக் காட்டினான். இஸ்ர வேல் ஜனங்களை வெற்றிகரமாக கானானுக்குள் பிரவேசிக்கச் செய்து, தேவ ஆலோசனையின்படியாக, பாலும், தேனும் ஓடும் அத்தேசத்தை 12 கோத்திரத்தாருக்கும் பங்கிட்டுக் கொடுத்தான்.

இந்த யோசுவா தனது இறுதி நாட்களில், தன்னால் வழி நடத்தப்பட்ட இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும் தேவனுடைய சந்நிதியில் நிற்கச் செய்து, (யோசுவா 24:1), மறக்கும் இயல்பை சற்று அதிகமாகவே கொண்ட இஸ்ரவேலுக்கு, ஒட்டுமொத்த சரித்திரத்தை நினைவு படுத்தி, தேவனுக்கு அவர்கள் விசேஷமானவர்கள் என்பதை எடுத்துச் சொல்லி, தேவன் அவர்களுக்குச் செய்த நன்மைகளை விவரித்துக்காட்டி, அந்த தேவனுக்கு அவர்கள் என்றென்றும் உண்மையாக இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, அவர் களுடைய சிந்தனையைக் கிளறி உணர்வுகளைத் தட்டியெழுப்பும் ஒரு பிரிவுபசார பிரசங்கத்தை மிக நேர்த்தியாகச் செய்தான்.

ஒரு பெருந்தலைவனின் மரண வாக்கு மூலமான அப்பிரசங்கத்தில், " ஆகையால், நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும், உண்மையுமாய் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள் " (யோசுவா. 24:14) என்று வலியுறுத்திவிட்டு, அத்தோடு நிறுத்தாமல், தொடர்ந்து, கர்த்தரை மாத்திரம் சேவிக்கும் ஒரு தீர்மானத்தை நீங்கள், என்னுடைய கண்களுக்கு முன்பாக எடுத்தே ஆக வேண்டும் என்பது போல நெருக்கி, அடுத்த வசனத்தில், " *கர்த்தரை சேவிக்கிறது* **உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னையாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள், நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக்குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்**" (யோசுவா 24:15).

யோசுவாவின் வாயிலிருந்து புறப்பட்ட ஆழமும், அர்த்தமும் மிகுந்த இவ்வார்த்தைகள், கூடியிருந்தவர்களின் நெஞ்சில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. அவர்கள் உடனடியாக, ஏகதுரலாக, " *...வேறே தேவர்களைச் சேவிக்கும்படி கர்த்தரை விட்டு விலகுகிற காரியம் எங்களுக்குத் தூரமாயிருப்பதாக* " (24:16) என்றார்கள். இதிலும், திருப்திப்படாத யோசுவா, மேலும் அவர்களைச் சோதிக்கும்படியாய், *நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள் என்றபோது...* " (24:19), ஜனங்கள் மீண்டும் யோசுவாவை நோக்கி; " *அப்படியல்ல நாங்கள் கர்த்தரையே சேவிப்போம்* " (24:21) என்றார்கள்.

ஆனால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இதே இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து, மறுரூபமலையில் இயேசுவோடு காட்சி தரும் அளவுக்கு (மத். 17:3) தனது தீர்க்கதரிசன ஊழியத்தில் நெடிதுயர்ந்து நின்ற எலியா, இஸ்ரவேலை ஆண்ட ஆகாப் என்பவனின் நாட்களில் " ***...நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்*** " என்றான். " *ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை* " (I ராஜா. 18:21), ஆம், அப்பொழுது அங்கே கூடியிருந்த திரளான ஜனங்கள் பேசாமடைந்தகளாக காட்சி தந்தார்கள்.

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பாக யோசுவா என்ற தேவமனிதன் " *மூன்றில் ஒன்றை தெரிந்தெடுங்கள்* " என்ற போது, தயக்கமோ, தடுமாற்றமோ, இல்லாமல், " *கர்த்தரை விட்டு விலகுகிற காரியம் எங்களுக்கு தூரமாயிருப்பதாக* " என்றும், " *அப்படியல்ல, நாங்கள் கர்த்தரையே சேவிப்போம்* " என்று சொன்ன தேவஜனம், யோசுவாவின் தகுதிக்கு சற்றும் குறையாத தேவ மனிதனாகிய எலியா, ஒரு நெருக்கடியான நிலையில், ஜனங்களைப் பார்த்து, " *இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுங்கள்* "

என்ற போது " *மாறுத்தரம் ஒன்றும் சொல்லாமல் மவுனம் சாதி* *தார்களே, அது ஏன்? ஏன் இந்த மாற்றம்?*" மாற்றத்திற்கு காரண என்ன? என்ன நடந்தது இடையில்? சொல்லுங்கள். இரண் இடங்களிலும் அதே தேவஜனம். இரண்டு இடங்களிலும் தே னால் பயன்படுத்தப்பட்ட வல்லமை நிறைந்த மனிதர்கள் இரண்டு இடங்களிலுமே ஏதாவது ஒன்றை தெரிந்தெடுக்கும்ப யாகத்தான் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால், அன்று *கர்த்தரையே சேவிப்போம் என்று உரக்கத் கத்தினவர்கள்* இன்று; *ஊசி விழுந்தால் சத்தம் கேட்குமளவுக்கு மவுனமா* *நின்றார்களே, அது ஏன்? ஏன்?*.

மனிதனால் ஏற்படுத்தப்படும் எல்லா மாற்றங்களுக்கும் ஒ அடிப்படை காரணம் இருப்பதுபோல், இதற்கும் ஒரு வலுவா காரணம் இருக்கவே செய்தது. இந்த மாற்றம் உடனடியாக நடந் ஒரு மாற்ற மல்ல. இதற்கு தேவைப்பட்டது சுமார் 600 ஆண் காலம். இந்தக் காலக்கட்டத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மெல் மெல்ல கர்த்தரை விட்டு விலகி, பதில் கூட சொல்ல முடியா ஒரு கேடான நிலையை அடைந்து விட்டார்கள். யெகோவ வாகிய கர்த்தர் உண்மையான தேவனா? அல்லது பாகா உண்மையான தெய்வமா? என்று சந்தேகிக்கும் அளவுக்கு நிலை மை சென்று விட்டது. (I ராஜா 18:24). இதற்குக் காரண அந்நாட்களில், இஸ்ரவேலுக்குள்ளாக பெருகி அவர்கள நெஞ்சில் இடம் பிடித்துவிட்ட " **விக்கிரக வணக்கமே** ".

இஸ்ரவேலின் சரித்திரத்தை நாம் கொஞ்சம் அலசிப்பார் தால் இக்கேடான நிலை எப்படி வந்தது என்று ஓரளவு புரிந் கொள்ளலாம். விக்கிரக வணக்கத்தை தேவன் " *ச்சீ* " (உபா. 7:2 ஏசா. 30:22) என்று ஒதுக்கச் சொல்கிறார் ஆம்! அது யெகே வாவின் பார்வைக்கு அருவருப்பானது. ஆனாலும், " *யோசுவ உயிரோடிருந்த சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரவேலுக் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவ வுக்குப் பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பர்களுடைய சக நாட்களிலும் இஸ்ரவேலர் கர்த்தரை சேவித்தார்கள்* ". (யோசுவ 24:31). இவர்களுக்குப்பின் எழும்பின அடுத்த சந்ததியா பாகால்களையும், அஸ்தரோத்தையும் சேவித்தார்கள். (நியா 2:10-13).

இவர்களின் இக்கேடான செயல்களுக்குத் தண்டனையா தேவன் இவர்களை எதிரிகளிடம் ஒப்புக்கொடுத்து இவர்கள ஒடுக்குவார். ஒடுக்குகிறவர்களினிமித்தம் இவர்கள் தவிக்கு போது கர்த்தர் மனஸ்தாபப்பட்டு இறங்கி இவர்களை இரட்சி கும்படி நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுவார். அப்பொழு இவர்கள் கர்த்தரை சேவிப்பார்கள். நியாயாதிபதிகள் மரிக்கு போது, மீண்டும் அந்நிய தேவர்களைப் பின்பற்றவும், சேவிக் வும், பணிந்து கொள்ளவும், தங்கள பிதாக்களைக் காட்டிலு கேடாய் நடப்பார்கள். இதைத்தான் நியாயாதிபதிகள் புத்தக முழுவதிலும் நாம் பார்க்கமுடியும். அதாவது, யோசுவாவி நாட்களிலும், அதைத் தொடர்ந்து வாழ்ந்த மூப்பர்களி

நாட்களிலும் பக்தி விசயங்களில் ஓரளவு நிலையாக இருந்த இஸ்ரவேல், நியாயாதிபதிகளின் நாட்களில், யூரோக்கிலிதோன் புயலில் சிக்கிய கப்பல் போல, மெய்யான தேவனுக்கும், பொய்யான தெய்வங்களுக்குமிடையில் மகா தள்ளாட்டமாய்த் தள்ளாடினார்கள்.

அதன் பிறகு ராஜாக்களின் காலம் தொடங்கியது. ஒரு வேளை, சவுல்ராஜா கொஞ்சம் சரியில்லையென சொல்லும்படி யான நிலையிருந்தாலும், அவன் நாட்களில் விக்கிரக வணக்கம் இல்லை. பிறகு தாவீது அரசனின் நாட்கள், அது இஸ்ரவேலின் பொற்காலம். கர்த்தர் தாவீதுடனே இருந்தார். அதன் பிறகு, ஞானி என்று பெயர் பெற்றும், தனது இறுதிக் காலத்தில் மூடனாக ஜீவித்த சாலமோன் ராஜாவின் காலம். இந்த துன்மார்க்கனின் மோக இச்சை ஒழுக்க ரீதியான எல்லை கடந்த படியால், இவன் தேசத்தின் எல்லையைக் கடந்து அந்நிய ஜாதியான அநேக ஸ்திரீகள் மேல் ஆசை வைத்தான். அப்பொழுது, கர்த்தர் இஸ்ர வேல் புத்திரரை நோக்கி; நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; " *அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களை பின்பற்றும்படி உங்கள் இருதயத்தை சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்* " (I ராஜா. 11:2). " ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப் பட்ட பொற் பழங்களுக்குச் சமானம் " என்று தன்னால் எழுதப் பட்ட தேவ வார்த்தையைத் தானே மறந்து, சரியான நேரத்தில் தரப்பட்ட இந்த எச்சரிப்பை துச்சமென மதித்து, கொஞ்சமாக 700 மனைவிகளையும், 300 மறுமனையாட்டிகளையும் தேடிக் கொண் டான். விளைவு? " ......*அவனுடைய மனைவிகள் அவன் இருத யத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப் பண்ணி னார்கள்* " (I ராஜா 11:4).

இப்படி, அறிவை அடகு வைத்ததன் மூலம் ஞானசூன்ய மாகிவிட்ட சாலமோன் ராஜாவுக்குப் பிறகு, ஒட்டுமொத்த இஸ்ர வேல் ராஜ்ஜியம் வடக்கு, தெற்கு என்று பிரிந்து போனது. இதன் பிறகு வடக்கு ராஜ்ஜியம் அல்லது இஸ்ரவேல் இராஜ்ஜியம் என்ற ழைக்கப்பட்ட இஸ்ரவேலின் துவக்கமே துன்மார்க்கமானது. ஆம், இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய யெரொபெயாம், பலி பீடங்களையும், மேடைகளையும் கட்டினதோடல்லாமல், இரண்டு கன்றுக் குட்டிகளை உண்டாக்கி, கோவிலைக் கட்டி, ஒன்றைத் தாணிலும், பெத்தேலிலும் வைத்து, எருசலேமில் இருப்பது போன்ற பொய்ப் பண்டிகைகளை ஏற்படுத்தி, மெய்யான தேவ வணக்கத்தை விட்டு விலகுதல் என்ற விபரீத விளையாட்டுக்கு வித்திட்டான், இவனைத் தொடர்ந்து அரசாண்ட 19 ராஜாக்களில் ஒருவன் கூட, ஜனங்களை முழுமை யாக மெய்யான வணக்கத்தின்பால் திருப்பவேயில்லை. "*அங்கே கூரைக்கு கொள்ளி வைப்பவன் இருப்பதற்குள் சுமாரான பையன்* " என்று சொல்லப்படும் கதை போல், யோராம், யெகூ போன்றவர்கள் சுமாரான மோசம் (II ராஜா. 3:12; 10:31,36). மற்றவர்கள் பற்றியெல்லாம் கேட்கவே வேண்டாம்.

எப்படியோ, பரிசுத்த தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஓர் உன்னத ஜனம், விக்கிரகங்களின்பால் கொண்ட நாட்டத்தால், தங்களின் பக்தி நிலையை மாற்றி கொஞ்சம், கொஞ்சமாக விலகி, இந்த விபரீத விளையாட்டின் வெற்றிக்குக் கிடைத்த பரிசாக, கி.மு. 722 ஆம் ஆண்டு அசீரியர்களால் மேற்கொள்ளப் பட்டு, சிதறடிக்கப்பட்டு, உருத்தெரியாமல் அழிந்து, சரித்திரத் தின் பக்கங்களிலிருந்து முற்றிலுமாக எடுத்துப்போடப்பட்டார் கள் (II ராஜா 17:1-8). ஆம், இதன்பிறகு, இவர்கள் பற்றிய பேச்சு வேதாகம சரித்திரத்திலேயோ அல்லது உலக சரித்திரத்திலேயோ இல்லை.

சரி, இப்படி தேவனுடைய ஜனங்களின் பக்திநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை மையமாக வைத்து, நமக்கு பயன்படும் ஒன்றிரண்டு, பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

## I யோசுவாவின் காலமும் - முதல் நூற்றாண்டுக் காலமும்

மாற்றம் தரும் முதல் பாடம். இரண்டு காலங்களையும் ஒப்பிடுவதன் மூலம் கிடைப்பதாகும். ஆம், யோசுவாவின் காலத்தில் வாழ்ந்த பக்தியுணர்வு கொண்ட இஸ்ரவேலரையும், முதல் நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்த விசுவாச உறுதிகொண்ட கிறிஸ்தவர்களையும் நாம் ஒரு வகையில் ஒப்பிடமுடியும். இரட்சிப்பு என்ற பொருளை கொண்ட யோசுவாவுக்குப்பின் உயி ரோடிருந்த மூப்பர்களுடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் எப்படி கர்த்தரை சேவித்தார்களோ அதுபோலவே, இரட்சிப்பு என்ற பொருளையுடைய இயேசுவுக்குப் பின் வாழ்ந்த அப்போஸ் தலர்களுடைய காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், தங்களுடைய விசுவாச விஷயத்தில், ஒரு சிறப்பான இடத்திலேயே இருந்தனர். அக்கால கட்டத்தில், இஸ்ரவேலுக்குள் அவ்வப்பொழுது, விக்கிரக வணக்கத்தில் ஈடுபாடும், அதனடிப்படையில் சில சில்லறைச் சம்பவங்களும் ஏற்பட்டது போல, முதல் நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுடைய விசுவாச வாழ்க்கை யிலும் ஆங்காங்கே, சோதனைகளும் பின் மாற்றங்களும் இருக்க வே செய்தது. இருப்பினும், ஒட்டுமொத்த நிலைமை நன்றாகவே இருந்தது.

அப்படியானால் தவறு எங்கே நிகழ்ந்தது? அழிவை ஏற்படுத்தும் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதே. அது எப்படி? யோசுவாவின் காலத்து ஜனங்கள், ஒருவேளை மோசேயின் பிரமாணம் முழுமையையும் கைக்கொண்டோமென்று சொன்னா லும் கூட, குறிப்பிட்ட ஒரு கட்டளையை அவர்கள் பின்னுக்குத் தள்ளியதாகவே தோன்றுகிறது. “ இன்று நான் உனக்குக் கட்டளை யிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்திலிருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும், அவைகளைக் குறித்துப் பேச...” (உபா. 6:6,7) என்று மோசேயின் பிரமாணம் சொல்லு கிறது. இக்கட்டளைக்கு அந்த ஜனம் முழுமையாகக் கீழ்ப்படிந்தது

போல் தெரியவில்லை. ஏனெனில், “ பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் ” (நீதி. 22:6) என்று வேத வசனம் கூறுகிறது. வழிவழியாக இந்தக் காரியத்தை, தேவஜனம் செய்திருந்தால், இப்பெருந்தீமையைத் தவிர்த்திருக்க முடியும்! ஆக, முக்கியமான தேவ கட்டளை புறக்கணிக்கப்பட்டதால், அதாவது சிறிது சிறிதாக விலகி, ஒரு கட்டத்தில் முற்றிலும் அழிந்து போனார்கள்.

அதுபோலவே, முதல் நூற்றாண்டுக் காலத்தின் பிற்பகுதி யையும், குறிப்பாக அதன் பிறகு வந்த காலங்களையும் கவனித்துப் பார்த்தால், உபதேசம் தான் சீஷர்களின் - கிறிஸ்தவர் களின் பக்தி நிலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு - பின் மாற்றத் திற்குக் காரணமாகிவிட்டது. ஆனால், வித்தியாசம் யாதெனில், அங்கே உபதேசம் இல்லாமல் தேவ ஜனம் கெட்டு சரீரப்பிர காரமாக அழிந்தது. இங்கே *உபதேசங்களால், அதாவது கள்ள உபதேசங்களால்* தேவஜனம் வழிவிலகிப்போனது. ஆகவே, “ ...சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளு தலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்...” என்று எச்சரிக்க வேண்டியதாயிற்று. (II பேதுரு 1:10). இன்னும், “...கிறிஸ்து வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?... ” (II பேது. 3:10) என்று சொல்லுமளவு கூட நிலைமை போயிருக்கிறதென்றால், கள்ள உபதேசம், எந்தளவு கோலோச்சி யுள்ளது என்று பாருங்கள்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் உபதேசத்தின் தாக்கம் எந்தளவு உள்ளது என்று கவனியுங்கள். சரீரத்திலும், ஆன்மீகத்திலும் அழிவை ஏற்ப டுத்தும் வல்லமை உபதேசத்திற்கு இருக்கிறபடியால், நம்முடைய வாழ்க்கையில், உபதேசத்திற்கு - வேத வசனங்களின் உபதேசத் திற்கு நாம் எந்தளவு முக்கியத்துவம் தருகிறோம்? அப்போஸ் தலன் பவுல், தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரர் களாகிய தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் எழுதின நிருபங்க ளில், “ உபதேசம் பற்றியும், ஆரோக்கியமான உபதேசம் பற்றி யும் ” அநேக முறை வலியுறுத்திக் கூறுகிறாரே, அது ஏன்? (Iதீமோ. 1:11, II தீமோ. 4:3, தீத்து. 1:9,2:1) உபதேசத்தில் விழிப்புணர்வு இல்லாமலிருப்பது ஒருவனுடைய ஆன்மீகத்தை அழிக்கக் கூடும் என்பதால்தானே!.

ஆகையால், அருமையான வாசகரே, நாம் ஒவ்வொரு வரும் யோசுவாவின் காலத்தில் வாழ்ந்த தேவ ஜனங்களைப் போலவும், முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கிறிஸ்த வர்கள் போலவும் கர்த்தருடைய உபதேசத்திற்கடுத்த காரியங்களில் உண்மையும், செம்மையுமாயிருந்து; சரீர வாழ்வுக் கான பாதுகாப்பையும், ஆன்ம வாழ்வுக்கான பாதுகாப்பையும் பெற்றுக் கொள்வோமாக! ஏனைய காரியங்களில் நாம் மாற்றத் தை தேடினாலும், தேவ காரியத்தில் எப்பொழுதும் நிலைத்த தன்மையுடையவர்களாக இருப்போமாக!.

## II ஆகாபின் நாட்களும் - நமது நாட்களும்

மாற்றம் தரும் இரண்டாவது பாடம். ஆகாபின் நாட்களை யும், நமது நாட்களையும் ஒப்பிடுவதன் மூலம் கிடைப்பதாகும்.

ஆகாப் ராஜாவின் நாட்களில், தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளுகிற மக்களின் ஆன்மீகச் சீரழிவு உச்ச கட்டத்திற்குப் போய்விட்டது. ஆம், தேவனுடைய மனிதாகிய எலியா ஜனங்களைக் கூடிவரச் செய்து, " ......கர்த்தர் தெய்வமா னால் அவனைப் பின்பற்றுங்கள்.... " (I இராஜா. 18:21) என்று சொன்னபோது, ஜனங்கள் பேசாமலிருந்தார்கள். அதாவது, உண்மைக்கும், பொய்க்கும் வேறுபாடு காணமுடியாத ஒரு அவல நிலைக்கு அவர்கள் சென்றுவிட்டார்கள். மெய்யான தேவனை விட்டு, விக்கிரகங்களின் பின் சென்றதால், அவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது. பக்தி நிலையில் ஏற்பட்ட மாற்றத்தால், முடிவெ டுப்பதில் தடுமாற்றம் பெருமளவில் வந்தது.

ஆகாபின் நாட்களில் இருந்த அதே நிலைதான் இன்று நம்முடைய நாட்களில் இருக்கிறதோ என்று எண்ணுமளவு தான் காரியங்கள் உள்ளது. எப்படி உண்மையான தேவனுக்கும், பொய்யான தெய்வங்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஜனங்கள தடுமாறினார்களோ அதுபோலவே, மெய்யான தேவ னால் கட்டப்பட்ட ஒன்றான மெய் சபைக்கும், பிசாசின் விபரீத எண்ணங்களால் விளைந்த பொய்யான சபைகளுக்கும், வேறுபாடு காணமுடியாமல், கிறிஸ்தவம் தடுமாறுகிறது. இந்த நிலைக்கு காரணம் என்ன? ஆகாபின் நாட்களில் மெய்யான தேவனை விட்டு விலகி, விக்கிரகங்களுக்கு அடிபணிந்ததால், அவர்களு டைய ஒட்டுமொத்த ஆன்மீக வாழ்வில் தள்ளாட்டம் ஏற்பட்டது. நமது நாட்களில் மெய்யான சபையை விட்டு விலகியதால் கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆன்மீக வாழ்வில் ஒரு தள்ளாட்டம் காணப்படுகிறது.

உண்மையில், வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள கிறிஸ்த வத்திற்கும், இன்றைக்கு நடைமுறையில் உள்ள கிறிஸ்தவத்திற் கும் எந்த சம்பந்தமுமில்லையென்ற நிலைதான் காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபையாகிய கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில், கிறிஸ்தவர்க ளுக்குள்ளாக இருந்த மேலான குணங்கள் இன்று கிறிஸ்தவர்களி டையே இல்லை. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் நாம் பார்க்கும்போது, விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்தார்க ளென்றும், ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்தில் அனு தினமும் தரித்திருந்தார்களென்றும் உள்ளது. (அப். 2:44,46). ஆனால், இன்று, தேவனைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்பவர்களிடம் ஒருமித்தலும், ஒருமனமும் உள்ளதா? சொல் லுங்கள்? வேதாகம கிறிஸ்தவர்களுக்கும், இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்திற்குமிடையே ஒரு பெரிய இடைவெளி காணப்படு கிறதே அது, எதனால்? இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்? சொல்லுங்கள்.

எப்படி, " என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் " (யாத். 20:3) என்று மோசேயைக் கொண்டு சொல்லப்பட்ட தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் அந்நிய ஜனங்களின் விக்கிரகங்களைப் பின்பற்றி ஒரு சீரழிந்த நிலைக்கு இஸ்ரவேலர் சென்றார்களோ, அதே போன்ற வெளிப்படையான காரணம் தான் இங்கும். " இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் " (மத். 16:18) என்று ஒரே சபை பற்றி இயேசு செய்த வாக்குத்தத்தத்தை மறந்து, இன்னும் அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு, ஒரே சரீரம் " (ஒரே சபை) (எபே. 4:4) என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினதையும் கண்டு கொள்ளாமல், மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைகளில் தங்களை இணைத்துக்கொண்டு, ஆவிக்குரிய ரீதியில் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இயேசு கட்டின அந்த ஒரே ராஜ்ஜியமாகிய சபையில் யாரெல்லாம் அங்கமாக இருக்கிறார்களோ, அவர்கள் மாத்திரமே பரலோக பாக்கியம் பெற முடியும். (I கொரி. 15:24).

ஆகையால், அருமையான தேவனுடைய பிள்ளைகளே. தேவனைப் பின்பற்ற விரும்பும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் எது மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்று பார்த்தோம். ஜென்மீக வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், ஒருவேளை, இவ்வாழ்க்கையை ஏதாவதொருவகையில் பாதித்தாலும், அதன் விளைவு பூமியோடு முடிந்து போகக் கூடியது. ஆனால், ஆன்மீக வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், இப்பூமியைக் கடந்து, நித்தியம் வரை வரக்கூடியது. தேவனிடமிருந்து நம்மை என்றென்றும் பிரிக்கக் கூடியது. ஆகவே, நாம் தேவனுக்கடுத்த, சபைக்கடுத்த காரியங்களில் உபதேசங்களின்படி மாத்திரம் செய்வது அவசியம்.

இஸ்ரவேல் ஜனங்களின் ஆன்மீக வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் வடக்கு ராஜ்ஜியத்தின் ஜனங்களை கி.மு. 722-உடன் தேவனிடத்திலிருந்து நிரந்தரமாகப் பிரித்து விட்டது. ஒருவேளை நாமும் " ஆன்மீக காரியங்களில் " மாற்றம் விரும்பிகளாக இருப்போமானால், கிறிஸ்துவின் வருகையின் நாளிலிருந்து அல்லது நியாயத்தீர்ப்பின் நாளிலிருந்து அவரிடமிருந்து என்றென்றும் பிரிக்கப்பட்டுவிடுவோம். எனவே, ஆவிக்குரிய காரியங்களில், வேதவசனங்களுக்கு மாறான, மாற்றம் விரும்புகிற மக்களாக நாம் இராமலிருக்க பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக!.

## நன்றி கூறுகிறேன்

எங்களது அன்பான அழைப்பை ஏற்று 12-வது வேதாகம கருத்தரங்கிற்கு தமிழகத்தின் 46 பட்டணங்களிலிருந்து பெருந்திரளாக வருகைதந்து சிறப்பித்த உங்கள் ஒவ்வொருவருக்கும், ஜெபத்தில் தாங்கியவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். – ஆசிரியர்

# கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பது எப்படி?

இந்தப்பாடத்தில், நீங்கள் வசிக்குமிடத்தில் கர்த்தருடைய சபையை தொடங்குவது எப்படி என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

நாங்கள் இந்தக் காரியத்தைப் பற்றி மேலும் சொல்வதற்கு முன், மீண்டுமாக கூறிக்கொள்வது என்னவென்றால், நீங்கள் வசிக்குமிடத்தில் சபை இல்லாதிருக்கும் பட்சத்தில் சபை ஆரம்பிப்பது பற்றிச் சொல்கின்றோம். சபை ஏற்கனவே அங்கு இருந்தால், நீங்கள் அந்த பிராந்திய சபையின் அங்கத்தினராய் இருப்பது தான் சரி, அப்படித்தானே. சபை நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து நியாயமான தூரத்தில் இருக்குமானால், உங்கள் வீட்டிலோ அல்லது உங்கள் நரகத்திலோ, அல்லது கிராமத்திலோ உள்ள வேறொரு இடத்தில் சபையை ஆரம்பிக்க வேண்டாம். கிறிஸ்துவின் சபையானது பிரிவினை சபையல்ல என்பதில் தெளிவாயிருங்கள். அதைப் பற்றி சோதித்துப் பாருங்கள். அங்கே, சென்று அதன் ஆராதனை முறைமைகளை கவனியுங்கள். அது எந்தப் பெயரை தரித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் மற்றும் சிலவற்றையும் கவனியுங்கள். நாம் இப்படி செய்வதால் அந்தச் சபை கர்த்தருடைய சபைதானா? இல்லையா? எவ்று அடையாளம் காணகிறோம். இதில் என்ன வித்தியாசம் இருக்கிறதென்று காணலாம். சரிதானே, சரியானதற்கும், தவறானதற்கும் உள்ள வித்தியாசத்தை அது காண்பிக்கின்றது. கர்த்தர் எது தேவை என்பதை அறிந்திருக்கிறார். அவர் அறிந்திருப்பதினால் அதுவே சரி. மற்ற எல்லா வழிகளும் தவறுதானே.

சில நகரங்களில் அளவுக்கு அதிகமான சபைகள் இருக்கின்றன. இதை எதற்காக சொல்கிறோமென்றால், கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அருகாமையில் உள்ள பிராந்திய சபைக்குச் சென்று ஆராதிக்காமல் தங்கள் வீட்டிலோ அல்லது வாடகை இடத்திலோ சபையை தொடங்குகின்றனர். சில வேளைகளில், ஒரே வீதிகளில் இரண்டு அல்லது மூன்று சபைகள் கூடுகின்றன. அது சரியானதல்ல. சகோதரர்கள் மத்தியில் பிரிவினையை இது காண்பிக்கிறபடியினால் இது சரியானதல்ல. சிறுசிறு சபைகளாக இருந்து கொண்டு நாம் கஷ்டப்படுவதை விட ஒரே சபையாக சேர்ந்து ஒருவருக்கொருவர் ஊக்குவித்து, கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்யலாம்தானே. அப்படி செய்யாவிடில் அது சரியானதல்ல. சரியானது எது என்பதை அறிந்து கொள்ள என்னோடு தொடர்ந்து படியுங்கள்.

நீங்கள் வசிக்கும் இடத்தின் அருகாமையில் கிறிஸ்துவின் சபைகள் இருந்தும், மேலும் ஒரு சபையை ஆரம்பிப்பது குறித்து நாங்கள் சொல்லவில்லை. மாறாக, எந்த நகரத்தில் அல்லது இடத்தில் கர்த்தருடைய சபை இல்லையோ அங்கே சபை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிக்கிறோம். ஆனால், நீங்கள் கிறிஸ்துவின்

சபையை ஆரம்பிப்பது எப்படி அல்லது நிலைநிறுத்துவது எப்படி என்பதைக் குறித்து அறிய ஆவலாயிருப்பீர்கள் தானே. உண்மையில், சபையை ஸ்தாபிப்பதைக் குறித்தோ, வேறொரு சபையை ஆரம்பிப்பதைக் குறித்தோ நாம் சொந்த சபையை ஆரம்பிப்பதைக் குறித்தோ நங்கள் இங்கு பேசவில்லை. கர்த்தர் தனது சபையை ஏற்கனவே ஸ்தாபித்து விட்டார் என்பது நமக்குத் தெரிந்ததே. (மத். 16:18) முதன் முதலில் சபையானது, எருசலேமில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு ஏறக்குறைய மூவாயிரம் பேர் அதற்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு, கர்த்தரால் அதில் சேர்க்கப்பட்டபொழுது ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு பின்பு எங்கெல்லாம் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதோ, எங்கெல்லாம் அதற்குக் கீழ்ப்படிந்தார்களோ அங்கெல்லாம் கர்த்தருடைய சபை ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்திலிருந்து கர்த்தருடைய வார்த்தை எங்கெல்லாம் பிரசங்கிக்கப்பட்டு, மக்கள் கீழ்ப்படிந்தார்களோ, அங்கெல்லாம் சபையானது ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அது இன்றைக்கும் பொருந்தும். சபையை ஆரம்பிப்பது எப்படி என்று சொல்லும் பொழுது இதைத்தான் சொல்லுகிறோம். கர்த்தருடைய சபையானது ஆரம்பிக்கப்பட நீங்களும், மற்றவர்களும் கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டும். இது எளிது தானே.

இப்பொழுது சரியானது எது என்பதைப் புரிந்து கொண்டீர்கள். இன்னும் கொஞ்ச நேரம் எங்களோடு சேர்ந்து கவனியுங்கள். நீங்கள் கிறிஸ்தவர்களாய் இருப்பதினால் தேவனை ஆராதிக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள். நீங்கள் பிராந்திய சபையின் அங்கத்தினராக இருக்க விரும்புகிறீர்கள். ஆனால், நீங்கள் இருக்கும் இடத்திலோ கிறிஸ்துவின் சபை இல்லை. அப்பொழுது நீங்கள் என்ன செய்ய முடியும்?.

முதலாவதாக, உங்களுக்குக் கூறுவது என்னவென்றால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், அதாவது வாரத்தின் முதல் நாளிலோ அல்லது கர்த்தருடைய நாளிலோ வேத வசனங்களைப் படிக்கவும், தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணவும், ஆவிக்குரிய பாடல்கள் பாடவும், ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். கர்த்தர் தம்முடைய ஜனங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் தம்முடைய பந்தியில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புவதால், நாங்கள் உங்களுடைய சூழ்நிலையில் இருப்போமானால் புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சரசத்தையும், எடுத்துக்கொண்டு (!கொரி. 11:23-29)ல் சொல்லப்பட்ட மாதிரியின்படியே. கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூரும்படி பங்கு பெறுவோம். பின்பு எங்களுடைய வருமானத்திலிருந்து ஒரு பகுதியை கர்த்தருடைய வேலைக்கென்று அதாவது வேதாகமம் வாங்கவோ, கர்த்தருடைய பந்திக்கு தேவையானதை வாங்கவோ தனியாக ஒதுக்கி வைப்போம். நீங்களும் அப்படியே செய்வது நலம். நீங்கள் தனிநபராக இருந்தாலும் கூட இப்படிச் செய்வது உங்களை ஊக்குவிக்கக் கூடியதாயும், உங்களோடு கூட சேர்ந்து ஆராதிக்கும் நபரை கண்டுபிடித்து

கர்த்தருடைய சபையை ஆரம்பிக்கும் வரை உங்களை பெலப் படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

*இரண்டாவதாக,* நாங்கள் உங்களைப்போல இருப்போ மானால் உங்களுடைய குடும்ப அங்கத்தினர்களையும், நண்பர் களையும் கூட்டிச் சேர்த்து ஆராதிக்க முயற்சிப்போம். தனி நபர்கள், ஆண்கள், பெண்கள், வாலிபர்கள் ஆகியோரை சந்தித்து அவர்களோடு பேசி அவர்களை சத்தியத்திற்கென்று மாற்றும்படி வேதத்தை ஆராய்வோம். நாங்கள் அவர்களோடு பொறுமையாய் இருந்து நேரத்தை செலவழித்து, ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்பதையும் கர்த்தருடைய சபையைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதையும் வேதத்திலிருந்து வசன ஆதாரத்துடன் எடுத்துரைப்போம். அத்தருணத்தில் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ கர்த்தருக்குக் கீழ்ப்படிய முடிவெடுக்கலாம். அப்பொழுது, நீங்கள் அவர் களுக்கு, கர்த்தர் மேல் விசுவாசம் வைத்து, பின்பு பாவத்திற்கு மனஸ்தாபப்பட்டு, மனந்திருந்தி கிறிஸ்துவை தேவனுடைய குமாரரென்று அறிக்கையிடவேண்டும் என்பதைக் குறித்து எடுத்துரைக்க வேண்டும். அதற்காக நீங்கள், அப். 8:26-39 வசனப் பகுதியிருந்து, எத்தியோப்பியாவில் இருந்து வந்த மனிதனின் மன மாற்றத்தின் சம்பவத்தை இதற்கு எடுத்துக் காட்டலாம். அதன்பின்பு அவர்களிடம் நீங்கள் " இயேசு கிறிஸ்து வை தேவனுடைய குமாரரென்று விசுவாசிக்கிறீர்களா? " என்று கேட்டு அவர்களுடைய அறிக்கையின் பேரில் அவர்களை ஒரு குளத்திற்கோ அல்லது ஒரு ஆற்றுக்கோ, அல்லது ஒரு ஓடைக் கோ அல்லது அவர்கள் ஞானஸ்நானத்தின் தண்ணீருக்குள் மூழ்கும் அளவுக்கு எங்கே தண்ணீர் இருக்கிறதோ, அங்கே அழைத்துச் செல்லலாம். அப்படி அவர்கள் வரும்பொழுது மாற்றுடை எடுத்துவர வேண்டும் என்பதையும் அவர்களுக்குக் கூறி திருமுழுக்குக்கு முன்பு, இயேசு கிறிஸ்து எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தின் பேரில் பாவமன்னிப்புக்கென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் தருகிறோம் என்பதை கூறவேண்டும். (மத். 28:28-20) பின்பு அவர்களை ஒவ்வொருவராக அழைத்து தண்ணீருக்குள் முழுக்குதல் அவசியம். தண்ணீருக்குள் அவர்களுடைய உடல் முழுவதும் மூழ்க வேண்டும் என்பதை மனதில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் ஞானஸ்நானம் என்பது தண்ணீ ருக்குள் மூழ்குதல் என்று ரோமர் 6:3,4ம் கொலோ. 2:12ம் வாசிக்கிறோம்.

இப்பொழுது நீங்கள் ஒருவரையோ அல்லது அதற்கு மேற் பட்டவரையோ திருமுழுக்கின் மூலம் கர்த்தருக்கு கீழ்ப்படியச் செய்வதால் நீங்கள் வசிக்கும் இடத்தில் அல்லது உங்கள் நகரத்தில் கர்த்தருடைய சபை ஆரம்பமாகிவிட்டது.

கர்த்தருடைய நாளின் ஆராதனைக்கென்று உங்களுடைய வீட்டிலோ அல்லது இரட்சிக்கப்பட்டோரின் வீட்டிலோ அல்லது

பொது இடத்திலோ நீங்கள் கூடிவரலாம். மீண்டுமாக, நீங்கள் உங்கள் குடும்பத்தாரையும், உங்கள் நண்பர்களையும் பங்கேற் கும்படி அழைக்கலாம். பொதுமக்களை, நீங்கள் கூடிவரும் இடத் திற்கு, வரும்படி ஊக்குவிக்கலாம். இரட்சிக்கப்பட்டவர்களுக் குள்ளே யார் பிரசங்கம் செய்வது, ஜெபத்தில் வழிநடத்துவது, கர்த்தருடைய பந்தியை நடத்திக்கொடுப்பது, பாடல்களை வழி நடத்துவது, கர்த்தருடைய பந்தியை நடத்திக் கொடுப்பது, பாடல் களை வழிநடத்துவது என்பதை நீங்கள் அறிவீர்கள் தானே. பெண்கள் கர்த்தருக்காக என்னதான் செய்யலாம் என்று கேட்கிறீர் களா? சொல்கிறேன் கேளுங்கள். கர்த்தருடைய பந்திக்குத் தேவையான அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் தயாரிப்பதில் அவர்கள் நமக்கு தரலாம், குழந்தைகளுக்கு வேதபாடம் சொல்லிக் கொடுப்பதிலும், மற்ற பெண்களோடு வேத ஆராய்ச்சி நடத்துவதிலும் அவர்கள் உதவலாம்.

பிரசங்கத்தை பற்றியோ அல்லது வேத ஆராய்ச்சியையோ நாம் சிந்திப்போமானால் நாம் ஒரு பொன்னான காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். யாரும் பிரசங்கிக்க முன் வராத பொழுது, வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியையோ, சுவிசேஷக் கைப்பிரதியையோ, கட்டுரையோ வாசிப்பதில் தவறென்றும் இல்லை.

மேலும், நீங்கள் எங்களுக்கோ அல்லது வேறொரு கிறிஸ்துவின் சபைக்கோ இதைக்குறித்து தெரிவித்தால் நாங்கள் உங்களுக்கு உதவும்படியாக ஒரு சுவிசேஷப்பிரசங்கியாரை அனுப்பி வைப்போம்.

நீங்கள் ஒரு இளம் கிறிஸ்தவனாகவோ, அல்லது ஒரு பெண் ணாகவோ இருந்தால் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது கடினம் என்று எண்ணுகிறீர்கள். அப்படித்தானே, நீங்கள் அதில் தொடர்ந்து முயற்சிப்பதாலும், உங்களுக்கு இதில் உதவக் கூடிய வர்களுடன் தொடர்பு கொள்வதாலும். உங்கள் குடும்ப அங்கத்தி னர்களோடும், நண்பர்களோடும் வேத ஆராய்ச்சி செய்வதாலும் இந்த கடினமான காரியத்தை உறுதியாக நிறைவேற்ற முடியும். இப்படிச் செய்வதற்கு நீண்ட நாட்களாகும் என்று நினைத்தாலும் அது வெற்றியை கொடுக்கும் என்று அறிந்து கொள்ளுங்கள்.

இதை நீங்கள் வாசிக்கும் பொழுது கஷ்டமாக அல்லது சிரமமாக தெரிந்தாலும், உண்மையில் இதைச் செய்ய என்ன தேவையென்றால் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்ட உறுதி யான கிறிஸ்தவர்களோ கர்த்தருடைய இந்த வேலையையும், சபையின் ஆரம்பப் பணியையும் உறுதிபடச் செய்வார்களானால் அதன் வளர்ச்சி தானாய்த் தொடரும் என்பதில் ஐயம் ஒன்று மில்லை.

**J.C. Choate** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# " தேவனுடைய வழியே சிறந்தது "

ஆபிரகாம் ஒரு தேர்ந்த விசுவாசியாக இருந்தபடியால், தேவன் அவனைப் பார்த்துக் கூறும்பொழுது, உன் பிள்ளைகளையும், உன் வீட்டாரையும் உன் பின்னே வரக் கட்டளையிடு, அவர்கள் கர்த்தருடைய வழியைக் காத்துக் கொண்டு நீதியாக நடக்கட்டும் என்றார் (" நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி... பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் ") (ஆதி. 12:2,3).

ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கு தேவனுக்கு உண்மையுள்ளவனாயிருந்தான். அவனுக்கு ஏசா, யாக்கோபு என இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். ஏசா, தேவனை விசுவாசியாத பெண்களை மணந்ததினால், அவனுடைய சந்ததியார் தேவ நம்பிக்கையற்றவர்களாயிருந்தார்கள். ஆதி 26:35ல் ஏசாவின் விக்கிரக ஆராதனை செய்யும் மனைவிகள், " *இவர்கள் ஈசாக்கிற்கும் ரெபெக்காளுக்கும் மன நோவாயிருந்தார்கள்* " என்று காண்கிறோம். ஆதி 27:46ல் ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி, " *ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது. இந்த தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன* " என்றாள்.

குடும்பமானது, தேவன் மீது விசுவாசத்தைத் தங்கள் இருதயங்களில் கொண்ட கணவன், மனைவி இவர்களால் கட்டப்பட வேண்டுமென்பதை ரெபெக்காள் உணர்ந்திருந்தாள். வேதாகம சரித்திரத்தில் இது ஒரு முக்கிய அம்சமாகவே விளங்கி வந்துள்ளது. இன்றைக்கும் கூட பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு மணம் முடிக்கும் பொழுது, தங்கள் பிள்ளைகள் விசுவாசமுள்ள துணையைத் தேர்ந்தெடுக்கும்படியாகப் போதிக்க வேண்டும்.

ரெபெக்காளின் வற்புறுத்தலின் காரணமாகவே யாக்கோபு, ஆரானிலிருக்கிற தன் மாமன் வீட்டிற்கு அனுப்பப்பட்டான். அங்கே அவன் மெய்யான தேவனை ஆராதிக்கும் தன் மாமன் மகளைச் சந்திக்கிறான். அவன் அவளை தாமதமில்லாமல் நேசித்தான். அந்த அப்பழுக்கற்ற நேசம், அவளுக்காக ஏழு ஆண்டுகள் சேவகம் செய்ய ஒப்புக்கொள்ள வைத்தது " *...அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்கு கொஞ்ச நாளாகத் தோன்றினது* " (ஆதி. 29:20). அந்த வருஷங்

கள் நிறைவேறின போது, லாபான் ராகேலுக்குப் பதிலாக தனது மூத்த மகளை திருமணத்தின் மூலமாக, தந்திரமான முறையில் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான்.

சிருஷ்டிப்பின் காலந்தொட்டே, திருமணத்திற்கான தேவனுடைய திட்டம், " ஒருவனுக்கு ஒருத்தி " என்பதே. ஆதாம், ஏவாள் இவர்களை ஒன்றாக இணைக்கும்பொழுது, தேவன் இவ்விதமாகவே சொன்னார். " *இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்* " (ஆதி 2:24).

அந்நாட்களில், தேவ சித்தத்திற்கு விரோதமாக மனிதன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை மணந்து கொள்வது ஒரு பொதுவான பழக்கமாகிவிட்டது. இப்பழக்கத்தை தேவன் அங்கீகரித்ததாக எங்கும் பேசாவிட்டாலும், அதை அந்நாட்களில் அவர் சகித்துக் கொள்ளவே செய்தார். யாக்கோபுடைய விஷயத்தில் நாம் பார்த்தால், யாக்கோபு ராகேலை நேசித்து, தெரிந்து கொண்டான். அவளைத் தான் அவன் திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டும். ஏழு ஆண்டுகள் அவன் அவளுக்காக உண்மையாகப் பாடுபட்டான். மணமகள், தான் விரும்பிய ராகேல் தான் என்று முழுமனதோடு நம்பி திருமணமும் முடித்தான். ஆனால், காலையிலே அவள் லேயாள் என்று அறிந்தான். லாபானை நோக்கி; ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்? ராகோலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலை செய்தேன். பின்னை ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணினீர் என்கிறான்? (ஆதி 29:25) அதற்கு லாபான்; மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கமல்ல என்று விளக்கம் கொடுத் தான். லாபான் ராகேலையும் உனக்குத்தருவேன். அவளுக்காக ஏழு வருஷம் வேலை செய் என்று யோசனை சொன்னான்! ராகேலுக்காக, யாக்கோபின் அன்பு அளவில்லாமல் இருந்தபடியால் அந்த யோசனையை அவன் ஏற்றுக்கொண்டான்.

இப்படிப் பல தாரங்களை (மனைவிகளை) மணந்து கொள்ளும் பழக்கம் வந்ததன் விளைவு என்ன? ஒரு பெரிய சந்தோஷமான குடும்பம் அமைந்ததா? இல்லை. " யாக்கோபு லேயாளைக் காட்டிலும் ராகேலை அதிகம் நேசித்தான் என்று நாம் வாசிக்கிறோம் " (ஆதி 29:30) முதலில் அவன் ராகேலை விரும்பியதால் இந்தப் பாரபட்சமான அன்பு ஏற்பட்டது இயற்கையே. ஆனால் இது பொறாமையை உண்டு பண்ணியது. " கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார். இப்பொழுது என் புருஷன் என்னை நேசிப்பார் " என்று அவளுடைய புலம்பலான வார்த்தைகள் லேயாள் ஒரு நேசிக்கப்படாத மனைவி என்பதை நமக்குக் காட்டுகிறது. லேயாள் இரண்டாம் குமாரனைப் பெற்று " ....நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்கிறாள் " (ஆதி. 29:33).

“ ராகேல் தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு யாக்கோபுவை நோக்கி; எனக்குப் பிள்ளை கொடு, இல்லா விட்டால் சாகிறேன் என்றாள் ” (ஆதி 30:1). உணர்ச்சி பொங் கின, வேதனை தரக்கூடிய வார்த்தைகளை இந்த சொந்த சகோதரி களிடம் நாம் காண்கிறோம்.

காலம் கடந்து செல்லும் பொழுது, இந்த இரண்டு பெண் களும் தங்கள் வேலைக்காரிகளை யாக்கோபுக்குக் கொடுத்து, பிள்ளைகளைத் தங்களுடைய தாக்கிக் கொண்டார்கள். இதுகூட அந்தக் கால கட்டத்தின் பழக்கங்களில் ஒன்று. இறுதியாக, ராகேல் யாக்கோபுக்குப் பிரியமான மகன் யோசேப்பைப் பெற்றுக் கொடுத்தாள். சில வருடங்கள் கழித்து யாக்கோபின் கடைசி மகனான பென்யமீனைப் பெறும்பொழுது, ராகேல் மரித்துப் போனாள். பதின் மூன்று குழந்தைகளும், லேயாள், ராகேல் ஆகிய இரு மனைவிகளும் அடங்கிய யாக்கோபின் குடும்ப வாழ்க்கையை நாம் கூர்ந்து கவனித்தால், தேவனுடைய விருப்பத்திற்கு மாறான பலதாரம், பாரபட்சம், பொறாமை, போட்டி இவைகளையே காண முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிரந்தரமாக இருந்ததா என்றால், இல்லையென்பதே பதில். ஒற்றுமையற்ற மனைவிகள் தங்கள் கணவன் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்? பொறாமை குணம் கொண்ட தாய்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தான் என்ன ஒழுக்கத்தைப் போதித்திருக்க முடியும்?.

ஆதியாகமத்தின் பிற்பகுதியை நாம் வாசிக்கும் பொழுது அவை நம்முடைய உணர்வுகளைக் கிளறக் கூடியதாகவே உள்ளது. சஞ்சலமும், கண்ணீருமே அவர்கள் இறுதி நாட்களின் சொத்து. இவைகள் நமக்கு உணர்த்தும் பாடம், தேவனுடைய வழியே எப்போதும் சிறந்தது என்பதே. ஆகவே, தேவனுடைய வழியை ஏற்றுக் கொள்வோம். கீழ்ப்படிவோம்.

**B.B. CHOATE** **R.R. NAYAGAM**

## சபையில் பெண்களின் பங்கு

1. *தலையின்மேல் முக்காடு போட்டுக்கொள்ள வேண்டும் (1கொரி 11:10).*

2. *ஆராதனையில் பேசாமல் அமைதியாக இருக்க வேண்டும் (1கொரி. 14:34).*

3. *தகுதியான வஸ்திரத்தினாலும், தேவபக்தியுள்ளவள் என்பதை காண்பிக்க வேண்டும். (1தீமோ 2:10).*

4. *உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீகளுக்கு அனுமதியில்லை (1 தீமோ 2:12).*

வாலிபர் பகுதி

# மகாபெரிய நாள்

**வா**லிப நெஞ்சங்களே! உங்களை இந்தக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த வகையில் நம்முடைய தேவன் நம்மை இந்த பூமியில் வைத்திருப்பதன் நோக்கம் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் (ஏசாயா 43:7). இந்த உலகத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் நிச்சயமாகவே நாம் நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்கு கொடுக்க வேண்டும். இந்த நியாயத்தீர்ப்பின் நாள் இந்த உலகத்தில் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்பவர்களுக்கு பயங்கரமான நாளாகவும் காணப்படும். இப்போது அந்த நியாயத்தீர்ப்பின் நாளை எப்படி மகிழ்ச்சியின் நாளாக மாற்றுவது என்பது பற்றி சில காரியங்களை தேவ வசனத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

நாம் வேதாகமத்தில் பார்க்கும் போது இந்த உலகத்தில் நாம் செய்த செயல்களுக்காக நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்கின்ற உண்மையை விட தெளிவாக எந்த ஒரு உண்மையும் வேதாகமத்தில் போதிக்கப்பட வில்லை (II கொரிந்தியர் 5:10). ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். ஆனால், இன்றைய நாட்களில் அநேகர் வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்த்தால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்றுமே இல்லை, நாம் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல் தெரிகிறது. (பிரசங்கி 11:9-ல்) சாலொமோன் ஞானி சொல்லும் போது வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி என்று சொல்கிறார். இந்த உலகத்திலே எத்தனையோ நிகழ்வுகள் இருந்தாலும் நியாயத்தீர்ப்பு நாளைப்போல பயங்கரமான நாள் ஒன்றும் இல்லை. அந்த நாளை மனதில் கொண்டவர்களாய் நாம் இந்த உலகத்தில் வாழும் போது தீமையை விட்டு விலகி கர்த்தருக்கு பிரியமான காரியங்களைச் செய்வோம். அப்போது நாம் அந்த நாளைக் குறித்து பயப்படாமல் சந்தோஷமான அந்த

நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். நாம் வாழும் இந்த உலகத்தில் வேத வசனங்களின்படி நடக்கவில்லையென்றால் நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும். நாம் வாழும் இந்த உலகமானது நம்முடைய நித்தியத்தைத் தெரிந்தெடுப்பதற்கு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் நாம் நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்பது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது. இப்போது வேதாகமத்திலிருந்து நாம் எதையாவது செய்யத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும் என்று வேத வசனங்களின் துணை கொண்டு பார்ப்போம்.

## I தேவனுடைய வசனங்களை அறியாதிருந்தால்

ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்றுக்கொள்ளத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? வேதாகமம் மனிதனுக்கு தேவனுடைய வெளிப்பாடாயிருக்கிறது. வேதாகமம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறது (எபேசியர் 3:1-3). நீங்கள் தேவனுடைய சத்தியத்தின் அறியாமையிலே மரித்து நித்தியமாக இரட்சிக்கப்பட முடியாது. சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார் (யோவான் 8:32). அந்தக் கடைசி மகாபெரிய நாளில் தேவனுடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). நம்முடைய நாட்களில் வேத வசனங்கள் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் மூலமாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனவே நாங்கள் வேத வசனங்களை கேட்டதே இல்லை என்று யாரும் சாக்குபோக்கு சொல்ல முடியாது. அப்படியே வேத வசனங்களைக் கேட்டிராவிட்டாலும், தேவனுடைய சிருஷ்டிப்புகளைப் பார்த்து இவைகளையெல்லாம் வடிவமைத்தவர் உருவாக்கியவர் ஒருவர் இருக்கிறார் என்று அவர்கள் முடிவுக்கு வரவேண்டும். அவர்களும் போக்குச் சொல்ல இடமில்லை.

நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும் படி ஜாக்கிரதையாயிருக்க வேத வசனங்களை நாம் படிக்க வேண்டும் (2தீமோத்தேயு 2:15). அதேபோல் நாம் கள்ளப்போதகர்களால் வஞ்சிக்கப்பட்டால், தவறாக நடத்தப்பட்டால், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்படுவதைக் குறித்து இயேசு எச்சரித்தார் (மத்தேயு 7:15-20). மேலும், இயேசு குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்று எச்சரித்தார் (மத்தேயு 15:14). அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய

வாசகர்களுக்கு எழுதும்போது பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதி னால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (1 யோவான் 4:1).

## II கிறிஸ்துவுக்குள் இல்லாதிருந்தால்


சத்தியத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்புக்கு மேல் வாய்ப்பு இருந்தும் அதைத் தள்ளி கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் போது நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? (ரோமர் 2:8,9; எபிரெயர் 2:1-3). ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பது மிக முக்கியமானது. ஒரு மனிதன் பெரிய வீட்டுக்குள் இருப்பது, அதிக ஆஸ்திகளுடன் இருப்பது, பெரிய அலுவலகத்தில் இருப்பது எல்லாம் இரட்சிப் புக்கும், நித்திய ஜீவனுக்கும் உதவாது. ஒருவர் கிறிஸ்துவுக்குள் ளிருந்தால் தான் கிறிஸ்துவும் அவனுக்குள் இருப்பார். அதுமாத் திரமல்ல கிறிஸ்துவுக்குள் தான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங் களும் இருக்கின்றன (எபேசியர் 1:3).

சரி, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவுக்குள் எப்படி இருப்பது பற்றி புதிய ஏற்பாட்டில் மிக தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ரோமர் 6:3,4ல் நாம் வாசிக்கும் போது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்தும் கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம். மேற்கூறப்பட்ட வசனத்தில் நாம் பார்த்தபடி ஒருவன் ஞானஸ்நானத்தினாலே தான் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் குணாதிசயங் களைப் பெற்றிருந்தால் இந்த உலகம் ஒரு வித்தியாசமான ஒன்றாக இருக்கும். IIகொரிந்தியர் 5:17ல் நாம் வாசிக்கும் போது ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்று வாசிக்கிறோம். பிரியமான வாலிப நெஞ்சங்களே இதுவரை நாம் இந்த உலகப்பிரகாரமான காரியங்களில் நம்மை மூழ்கடித்திருந் தாலும் பரவாயில்லை, இனிமேல் நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து ஒரு புதிய மனிதனாக வாழ்ந்து, அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங்களைப்போல் பிரகாசிப்போம், தேவன் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமென்!

**பென்னி மார்ட்டின்**

சிறுவர் பகுதி

# எகிப்தின் செல்வங்களைத் தூக்கி எறிந்தான்



எனக்குப் பிரியமான சிறு பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். மாதந்தோறும் வெளி வரும் செய்திகள் உங்களுக்கு பயனுள்ளதாய் இருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

இந்த மாதம் நாம் மோசேயைக் குறித்து பார்க்கவிருக்கிறோம். மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டு வந்தான். சரி, மோசேயைக் குறித்து என்ன பாடம் கற்றுக்கொள்ளப் போகிறோம் என்று கேட்கிறீர்களா? இதோ! பாடத்திற்குள்ளாக இப்பொழுது போவோம் வாருங்கள்.

மோசே குழந்தை பருவத்திலிருந்து வாலிபனாக மாறி பெரிய மனிதன் ஆன போது, எகிப்தின் இளவரசனாக தான் இதற்கு மேல் இருக்கப்போவதில்லை என்று தீர்மானித்தான் அவனுக்கும் " கிறிஸ்துவை உலகத்திற்கு கொண்டு வரும் பங்கு இருப்பதை அறிந்தான். அவனைக்குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது தெரியுமா? எபி. 11:26ல் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் ". மோசேயின் இந்த தியாகம் மிகப்பெரிய ஒன்று. இது அவனுக்கு இருந்த விசுவாசத்தை காட்டுகிறது. ஏனென்றால், எகிப்து மிகுந்த செல்வம் நிறைந்த நாடு. அதை விட்டு வருவதற்கு எவ்வளவு பெரிய விசுவாசம் வேண்டும்? அப்படித்தானே! மிகப் பெரிய விசுவாசந்தான் கர்த்தரை சேவிப்பதற்கு இந்த எல்லா செல்வத்தையும் விட்டுவிட்டான்.

எப்படி இவ்வளவு செல்வத்தை விட்டுவந்தான் சொல்கிறேன்.

தொல்பொருள் ஆராய்ச்சி செய்பவர் - ஹவார்டு கார்ட்டர். இவர் எகிப்தின் செல்வத்தை ஒரு சுவாரசியமான விதத்தில் விவரிக்கிறார். அவர் ஆராய்ச்சி செய்யும் போது " டுடான்காமென் "

அதாவது " டுட் " என்ற ராஜாவின் கல்லறையை கண்டுபிடித்திருக்கிறார். இதில் ஒரு முக்கியமான விஷயம் " டுட் " என்பவன் ஒரு பெரிய ராஜா இல்லை. அவன் மரித்த போது 18 வயதுதான் அவனுக்கு. அவன் கல்லறையை ஆராய்ச்சியாளர்கள் திறந்த போது அங்கே 5000க்கும் மேற்பட்ட செல்வப் புதையல்கள் இருந்தன. அதில் அநேகம் தங்கக் கற்கள் ஆகி இருந்தன. சில ஆராய்ச்சியாளர்கள் தங்கம் எகிப்து நாட்டில் தூசுபோல, குப்பை போல எல்லா இடங்களிலும் இருக்கும் என்று கூறுகின்றனர்.

மேற்சொன்ன அந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சொன்னது உண்மைதான் என்று இது விளக்குகிறது. ஒரு தங்க சிலை (Coffin) ($15^1/_2$Inch) உயரமுள்ள ஒன்று இன்றைக்கு 1,20,00,000 ரூபாய் ஆகும்.

இவ்வளவு பெரிய செல்வத்தை மோசே தூக்கி எறிந்து விட்டு, அடிமைகளோடு அடிமையாக தேவனின் சித்தம் நிறைவேற தன்னை ஒப்புக்கொடுத்தான்.

ஆம், இதுதான் நமக்கு ஒரு முக்கியமான பாடம். நம் வாழ்க்கையின் முக்கியமான பணி இது தான். அதுதான் நம் வாழ்க்கைக்கு நல்ல ஒரு அர்த்தத்தை கொடுக்கும்.

இந்த சிறு வயதிலிருந்தே இப்படிப்பட்ட எண்ணத்தை நாம் வளர்த்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.

அப்படி செய்வீர்களா? செய்வோம்! தேவாசீர்வாதம் பெறுவோம்!! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!!!

**Abel R. Nayagam.**

## சபையில் வாலிபனின் பங்கு

1. உன் இளமையைக் குறித்து ஒருவனும் அசட்டை பண்ணாமல் முன் மாதிரியாக இருக்க வேண்டும் [1 தீமோ 4:12]
2. உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். [1 தீமோ 4:16]
3. முதியோர்களை தன் பெற்றோர்களைப் போல நடத்த வேண்டும் [1 தீமோ 5:1,2]
4. சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகி தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் [1 தீமோ 6:20]

# "விசுவாசம் மாத்திரம்" என்பதின் மற்றுமொரு பார்வை

கிறிஸ்தவ உலகில் திரும்ப திரும்ப பயன்படுத்தப்படும் வாக்கியம் நாம் விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிக்கப்படு கிறோம் என்பது தான். இந்த வாக்கியத்தை வேதவசனங்களின் அடிப்படையில் நிரூபிப்பதற்கு இந்த தவறான உபதேசத்திற்காக வாதாடுகிறவர்கள் அநேக வசனங்களை மேற்கோள் காட்டு கிறார்கள், அவைகளுள் ஒன்று வேதாகமத்தின் தங்க வசனமாகிய யோவான் 3:16 தான். அந்த வசனம் இப்படியாகச் சொல்கிறது "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கி றவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " என்று. இந்த வசனத்தில் விசுவாசம் குறிப்பிடப் பட்டிருக்கிறபடியால் இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் மாத்திரம் அவசியம் என்று முடிவுக்கு வந்து விடுகிறார்கள். இந்த உபதேசத்தை ஆதரிக்கிறவர்கள் " கிறிஸ்தவர்கள் தேவனுக்குப் பிரியமான கீழ்ப்படிதலுள்ள நல்ல வாழ்க்கையை தொடர்ந்து வாழவேண்டும் வேறு எதுவும் தேவை இல்லை. ஒருவர் எந்த கிரியையும் செய்வதற்கு முன்பாகவே இரட்சிக்கப்படுகிறார் " என்று வாதிடுகிறார்கள். இரட்சிக்கப்படு வதற்கு ஒருவர் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவை இரட்சகர் என விசுவாசித்து அவரை ஆண்டவரும் இரட்சகரென்றும் உங்கள் இருதயத்தில் அழைத்தால் அதுவே போதுமானது. அப்போது நீங்கள் எந்த கிரியையும் செய்வதற்கு முன்பே இரட்சிக்கப்படுகிறீர்கள் என்று சொல்கிறார்கள்.

விசுவாசம் அவசியம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஏனென்றால், விசுவாசமில்லாமல் எதுவும் எதையும் நிறைவேற்ற முடியாது. ஆயினும் ஒருவர் விசுவாசிக்கும் போது இரட்சிக் கப்படுவதில்லை. அந்த விசுவாத்தை கிரியையாக மாற்றும் போது இரட்சிக்கப்படுகிறார். இரட்சிக்கப்படுவதற்கு இன்னும் அதிக மாக தேவைப்படுகிறது என்று என்னைப் போன்று வலியுறுத்து கிறவர்கள், வேதாகமத்தின் பகுதியானது பெரும்பாலான இடங் களில் முழுமையைக் குறிக்கிறது என்று வலியுறுத்துகிறார்கள். யோவான் 3:16 ல் விசுவாசம் என்பது மனிதன் இரட்சிக்கப்படு வதற்கு தேவையான இரட்சிப்பின் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக் கிறது. இது மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்

நானத்தை உள்ளடக்கியது தான். யோவான் 3:16 ல் மனந்திரும்புதல் குறிப்பிடப்படவில்லை என்பதால் மனந்திரும்புதல் இரட்சிக்கப்படுவதற்கு அவசியம் என்பதை சிலர் மறுக்கிறார்கள். அதைப்போலவே ஞானஸ்நான மும் அவசியம் என்பதை அநேகர் ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு மனந்திரும்புதலை போன்று ஞானஸ்நானம் அவசியப்படுகிறது. ஞானஸ்நானத்தில் நாம் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறக்கிறோம் (யோவான் 3:3). மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தி னாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் படுகிறோம் (ரோமர் 6:4).

இது தொடர்பாக மற்றுமொரு வசனம் குறிப்பிடப்பட வேண்டியது அவசியம் என நம்புகிறேன். அது யோவான் மூன்றாம் அதிகாரத்தின் கடைசி வசனம் தான். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக் கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ நித்திய ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும் (யோவான் 3:36). இந்த வசனத்தின் முதல் சொற்றொடர் ஒருவர் இரட்சிக்கப்பட விசுவாசம் அவசியம் என தெளிவாக உறுதியளிப் பதை கவனியுங்கள், அதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். ஆயினும், இப்போது இரண்டாவது சொற்றொடரை கவனியுங்கள். இந்த சொற்றொடர் முதல் சொற்றொடருக்கு நேர் எதிர்மறையாக உள்ளது. ஏனென்றால், மூலபாஷையில் இரண்டாம் சொற்றொடர் குமாரனுக்கு கீழ்ப்படியாதவனோ என்று இருக்கிறது. ஒருவர் யோவான் இந்த இடத்தில் விசுவாசத்திற்கு எதிர்ப்பதமான அவ்விசுவாசத்தை குறிப்பிட்டிருக்கலாமே என்று சொல்லக்கூடும். ஆனால், யோவான் அப்படிச் செய்யவில்லை. புகழ்பெற்ற வேத அறிஞரான F.F. Bruce சொல்லும் போது " பிஸ்டியோ " என்கிற கிரேக்க பதத்திற்கு விசுவாசம் என்று தமிழில் பொருள்படுகிறது. இந்த பிஸ்டியோ கீழ்ப்படிதலை உள்ளடக்கவில்லையென்றால் யோவான் இப்படிப்பட்ட ஒரு ஒப்பீடை செய்திருக்கமாட்டார். இதே பிஸ்டியோ என்கிற கிரேக்க பதம் வேறு வசனங்களிலும் கீழ்ப்படியாமை என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருகிறது. உதாரணத்திற்கு ரோமர் 2:8 யை வாசியுங்கள். " சண்டைக்கார ராயிருந்து சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர் களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும் ".

மற்றுமொரு வசனத்தைக் கவனியுங்கள். “ கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள் முழுதும் என் கைகளை நீட்டினேன் என்று அவன் சொல்லியிருக்கிறான்” (ரோமர் 10:21)

இந்த வசனங்களை நாம் ஒப்பிட்டுப்பார்க்கும் போது விசுவாசமும் ஒன்று தான் என்பதை நாம் காணமுடியும். எனவே, நாம் கீழ்ப்படிய மறுத்தால் அது அவ்விசுவாசத்திற்கு சமமாகும். ஆகவே, தேவனால் ஏவப்பட்டு யோவான் வேதாகம விசுவாசம் கீழ்ப்படிதலை உள்ளடக்கியது என்று சொல்கிறார். இது வேத வாக்கியங்களில், இரட்சிக்கிற விசுவாசம் கீழ்ப்படிகிற விசுவாசம் எனத் தெளிவாக உதாரணத்தினால் விளக்குகிறது. ஆகவே, நாம் விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிக்கப்படுவதில்லை. கிரியையில் தன்னை வெளிப்படுத்துகிற விசுவாசமே நம்மை இரட்சிக்கிறது. அது கிரியையில் வெளிப்படாதபோது அது செத்த விசுவாசத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை (யாக்கோபு 2:20). இது வெறுமனே கிரியைகள் அடிப்படையிலான இரட்சிப்பைப் பற்றிய போதகம் அல்ல. நம் இரட்சிப்பின் அடிப்படை இயேசு கிறிஸ்துவிலும், சிலுவையில் அவருடைய தியாக மரணத்திலும் தொடர்ந்து விசுவாசம் வைப்பதாயிருக்கிறது, ஆனால் அந்த விசுவாசம் அவருக்கு சேவை செய்யும் வாழ்க்கையையும் உள்ளடக்கியது. அவருக்கு சேவை செய்யும் வாழ்க்கை இல்லாமல் ஒருவர் எப்படியாவது இரட்சிக்கப்படலாம் என்கிற எண்ணம் வேத வசனங்களுக்கு அந்நியமாயிருக்கிறது. இது ஒருவர் விசுவாசமே இல்லாமல் இரட்சிக்கப்பட முடியும் என வலியுறுத்துவதைப் போன்றது. ஒருவர் ஒன்றில்லாமல் மற்றொன்றை செய்ய முடியாது. கீழ்ப்படிதல் என்பது நிபந்தனையற்றது என நினைத்துக் கொண்டு தவறாக வழிநடத்தப்படாதிருங்கள்.

**Jerry Bates** **Benny Martin**

## முதியோர்களின் பங்கு

1. தங்கள் சொந்த குடும்பத்தை தேவபக்தியாக விசாரிக்க வேண்டும். (I தீமோ 5:4)
2. தங்கள் பேரன், பேத்திகளுக்கு உபதேசிக்க வேண்டும் (II தீமோ. 1:4,5)
3. உபத்திரவப்படுகின்ற விசுவாச குடும்பத்தாருக்கு உதவி செய்ய வேண்டும். (I தீமோ 5:10)
4. நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், விசுவாசத்தில் முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும் (தீத்து 2:2,3).

# சபையின் ஊழியம்

சபையின் ஊழியமானது புதிய ஏற்பாட்டில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பல்வேறு வழிகளில் அது வெளிப்படுத்தப் படும். சபையின் ஊழியம் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும். இதை வேறு விதமாகச் சொன்னால், சபை தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும், தேவபக்தியுள்ளவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும், தேவ பக்தியில்லாதவர்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டும்.

சபை தேவனுக்கு செய்யும் ஊழியம் அல்லது சேவை ஆராதனை எனப்படும். தேவனை நோக்கி பக்தி செயல்பாடுகளில் வெளிப்படுத்தப்படும் மரியாதையுள்ள சேவை ஆராதனை எனப்படும். ஆராதனை என்பது தங்களை தனித்துவம் வாய்ந்த வர்களாக காட்டிக்கொள்ள விரும்புபவர்களுக்கான பொழுது போக்கல்ல. ஆராதனை என்பது தேவனால் ஏற்றுக் கொள்ளப் படவேண்டுமென்றால் அது விளையாட்டாக, பொழுதுபோக்காக கருதபடக்கூடாது. அதை லேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மாறாக, அது மரியாதையுடனும், உண்மையுடனும் ஏறெடுக்கப் படவேண்டும். ஆராதனை என்பது நம்மை நோக்கி ஏறெடுக்கப் படக்கூடாது மாறாக, தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும். புதிய ஏற்பாட்டு ஆராதனையானது எப்போதும் எளிமையாகத்தான் இருந்திருக்கிறது. வீண் ஆடரம்பரமாகவும், ஒரு சடங்காச்சாரமாகவும் இருக்கவில்லை. சபை இருப்பதற்கான உண்மையான நோக்கமே நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்குத்தான் (எபேசியர் 1:11).

அடுத்த சபையின் உள்நோக்கிய ஊழியம் சபையை பக்திவிருத்தி அடையச் செய்வது தான். பரிசுத்தவான்களை பூரண ராக்குவதும் சபையின் வேலைதான். நாம் எப்படி ஒரு மந்தையில் ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கிறோமோ அதேபோல் நாம் மனமாற்றம் செய்தவர்களுடைய தனிப்பட்ட பிரச்சனைகளில் உதவிச் செய்யும் பொறுப்பு நமக்கு உண்டு. அவர்களுடைய ஜீவியங்கள் முறிந்து போயிருக்கின்றன, அவர்களுடைய கனவு கள் வெடித்துச் சிதறி போயிருக்கின்றன, அவர்களுடைய நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. பரிசுத்தவான்கள் பக்தி விருத்தி அடையும்படியான போதனை ஊழியத்தில் அநேகர் அக்கறைக் காட்டுவதில்லை. சீஷராக்குங்கள் என்று சொன்ன அதே கர்த்தர் நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங் கள் என்றும் சொன்னார் என்பதை மறந்துவிட வேண்டாம்.

அடுத்ததாக சபையின் மற்றொரு ஊழியம் ஒன்று இருக்கிறது. தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் (அப். 5:42). நாம் ஆராதனை மாத்திரம் செய் கிறவர்களாயிருந்தால் நம் ஊழியத்திற்கு ஒரு வரையறை ஏற்படுத்திக் கொள்கிறோம். இயேசு சபையை ஸ்தாபித்து விட்டு உலகத்தின் அந்நியச் சூழலில் விட்டுவிட்டுச் சென்றார். ஏனென்றால், அது உலகத்தில் ஏதோ ஒன்று செய்ய வேண்டிய தாயிருந்தது. நாம் சுவிசேஷப் பிரசங்கத்தை வெளிப்படையாக வும், தனிப்பட்ட ரீதியிலும் அநேகருக்கு அறிவிக்க வேண்டும். சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்கிற ஒவ்வொருவரும் அதை மற்ற வர்களுக்கு அறிவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அனுதினமும், எல்லா இடங்களிலும் எதாவது ஒரு விதத்தில் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். இவைகள் தான் சபையின் ஊழியம்.

**LEON COLE** **BENNY MARTIN**

## கேள்வி - பதில்

ஒருவர் இரட்சிக்கப்பட கிறிஸ்துவின் சபையில் அங்கத்தி னராக இருப்பது அவசியமா? அல்லது ஒருவர் கத்தோலிக்க சபை யிலோ அல்லது மற்ற மார்க்கப் பிரிவினை சபைகளுள் ஒன்றில் இருந்தால் இரட்சிக்கப்பட முடியுமா?

உண்மையாகவே, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டு மென்றால் அவர் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டும், ஏனென்றால் அந்த சபைக்காகத்தான் இயேசு தன் ஜீவனையே விட்டார். இயேசு தான் ஒரு சபையைக் கட்டுவதாகச் சொன்னார் (மத்தேயு 16:18). அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் சபை ஸ்தாபிக்கப்பட்டதை நாம் வாசிக் கிறோம். அந்த சபை அவருடைய சரீரமாயிருக்கிறது என்று எபேசியர் 1:22,23 வசனங்களில் பவுல் சொன்னார். பின்பு எபேசியர் 4:4ல் அவர் ஒரே சரீரம் தான் இருக்கிறது என்று சொல் கிறார். இந்த ஒரே சரீரத்திற்குள்ளாக அதாவது இந்த ஒரே சபைக் குள்ளாக ஒரே ஆவியின் வழிநடத்துதலினாலே ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் (I கொரிந்தியர் 12:13). ஆவியின் வழி நடத்துதல் தேவனுடைய வார்த்தையினால் தான் உண்டாகிறது. ஏனென்றால், அந்த தேவனுடைய வார்த்தை தான் ஒருவர் அந்த ஒன்றான சபையில் எப்படி பிரவேசிக்கிறார் என்று சொல்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில்

பெந்தெகொஸ்தே நாளில் அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார் கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (வ41) இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே (தம்முடைய சபையிலே) சேர்த்துக் கொண்டு வந்தார் (வ 47). இந்த விசுவாசித்த ஜனங்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றார் கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (வ41) இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே (தம்முடைய சபையிலே) சேர்த்துக்கொண்டு வந்தார் (வ47). இந்த விசுவாசித்த ஜனங்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றார் கள் (அப். 2:38) அதன் பின்பு கிறிஸ்து கட்டின சபையில் அவர் கள் சேர்க்கப்பட்டார்கள். அவர் கள் 600 வருடங்களுக்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்க சபையில் சேர்க்கப்படவில்லை, அல்லது பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், அதன் பின்பும் ஸ்தாபிக்கப்பட்ட வேறு எந்த மார்க்கப்பிரிவினை சபை களிலும் அவர்கள் சேர்க்கப்படவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட எல்லோருமே கிறிஸ்துவின் சபையில் தான் அங்கத்தினராகத்தான் இருந்தார்கள்! வெளிப்படையாகவே இன்றைய நாட்களில் வாழ்பவர்களுக்கு அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் ஜனங்க ளுக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை. இன்றும் ஜனங்கள் அவருடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு விசுவாசித்து அதற்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுத்து, மனந் திரும்பி, அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெறும்போது இவர்களும் தேவனாலே அதே சபையில் சேர்க்கப்படுகிறார்கள்; அதாவது ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படுகிறார்கள் (ரோமர் 16:16). கிறிஸ்து ஒரே ஒரு சபையைக் கட்டினபடியால் (வேதாகமத்தின் சபையை) கத்தோலிக்க மற்றும் ப்ராடஸ்டண்ட் சபைகளாகிய மத அமைப்புகள் எல்லாம் மனிதனால் கட்டப்பட்டவைகள் என்று தான் முடிவுக்கு வரவேண்டும் (மத்தேயு 15:8-14). மனிதனால் கட்டப்பட்டவைகளில் இரட்சிப்பின் வாக்குத்தத்தம் இல்லை; நம்பிக்கையின் வாக்குத்தத்தம் இல்லை; கிறிஸ்துவின் ஆசீர்வா தங்களின் வாக்குத்தத்தம் இல்லை (எபேசியர் 1:3). இத்தகைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் அவருடைய சரீரமான சபையில் அதாவது கிறிஸ்துவின் சபையில் தான் காணப்படுகிறது.

# கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியின் ஊழியம்

## முன்னுரை

தேவத்துவத்தில் ஒருவரானவரும் நித்தியமானவருமான பரிசுத்த ஆவியானவர் நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பும், கிறிஸ்துவுக்குள் வந்த பிறகும் ஊழியம் செய்கிறார். பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துகிறார். கிறிஸ்துவுக்குள்ளாக ஆவியானவர் செய்யும் ஊழியங்களைப் பற்றி சுருக்கமாக கவனிப்போம்.

## கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவி

இயேசுவின் நாமத்திலே நாம் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்த ஆவியை ஈவாகப் பெறுகிறோம். அப். 2:38 அது மேலும் நாம் விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்படுகிறோம். எபே. 1:13,4:30, எனவே கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே நாம் பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியையும் பெறுகிறோம். கிறிஸ்துவுக்குள் தான் நமக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிடைக்கிறது.

## ஜெப உதவி செய்கிறார்

நம்முடைய பிதாவாகிய தேவனை அப்பா, பிதாவே என கூப்பிடக்கூடிய புத்திர சுவிகார ஆவியின் மூலமாக நாம் தேவனை நோக்கி ஜெபிக்க முடியும். கலா 4:6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் பிலிப் 4:6, ரோமர் 8:15, இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் Iதெச 5:17.

## கிறிஸ்தவர்களில் வாசமாயிருக்கிறார்

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா என்று பவுல் எழுதுகிறார் (Iகொரி 3:16). ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனின் உள்ளத்திலும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்து வழிநடத்துகிறார் (I கொரி 6:19).

## சாட்சி கொடுக்கிறார்!

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். (ரோமர் 8:16) ஆகவே நாம் தேவனுடைய பிள்ளைகளென்று நமக்கு எப்படி தெரியும்?.

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆவியுடனே கூட நாம் தேவனுடைய பிள்ளைகளென்று சாட்சி கொடுக்கிறதின் மூலமாக தெரிகிறது. ஆகவே, நிச்சயமாக அவர் நம்மோடிருக்கிறார் நம்மை முத்தரிக்கிறார். (எபே. 4:30).

**மனித ஆவியை பலப்படுத்துகிறார்.**

நமக்கு சோர்வு, சோதனைகள், பாடுகள், துக்கம், கவலை, தொல்லைகள் போன்றவற்றை, சாத்தான் உண்டாக்கும்போது அதைத் தாங்கக் கூடிய பெலனையும், தந்து அதிலே தப்பித்துக் கொள்ளக் கூடிய போக்கையும் உண்டாக்குகிறார். 1கொரி 10:13 இன்னும் பவுல் ரோமசபையாருக்கு எழுதும்போது நம்முடைய ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான் களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர். ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8:27).

**புதிய உடன்படிக்கையை நம் இருதயத்தில் எழுதுகிறார்.**

ஏரே 31:31-34ல் புதிய உடன்படிக்கையை கொடுப்பதாக தேவன் வாக்களித்தார். அந்த புதிய உடன்படிக்கை ஆவிக்குரிய தாயிருக்கிறது. அது அன்பின் கீழும், விசுவாசத்தின் கீழும் கிறிஸ்துவினுடைய எல்லா உபதேசத்தையும் கைக்கொள்ளுகிறது. அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து அவர்களுடைய இருதயங் களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப் போன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் (எபி. 8:10) இப்படி யாக ஆவிக்குரிய சகல திட்டங்களையும் கைக்கொள்ள ஆவி யானவர் உதவி செய்கிறார்.

**தேவ அன்பை ஊற்றுகிறார்.**

தேவன் அன்பாகவேயிருக்கிறார். அவருடைய தெய்வீக அன்பினாலே சகலத்தையும் தாங்கி, சகலத்தையும் சகிக்கிறார். I கொரி 13:1-8 இப்படிப்பட்ட தேவனுடைய அன்பை நம்முடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றுகிறார். மேலும், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்மு டைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக் கை நம்மை வெட்கப்படுத்தாது (ரோமர் 5:5).

**முடிவுரை**

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்கு இப்படிப்பட்ட தெய்வீக அன்பைக் கொடுத்து உலகத்திற்கு சேவை செய்யவும், ஊழியம் செய்யவும் ஏவுதல் செய்யவும், வழிநடத்தி, பாதுகாத்து ஜெப உதவி செய்து மனுஷனுடைய ஆவியை பெலப்படுத்துகிறார். அவரை நாம் துக்கப்படுத்தாமல் கிறிஸ்துபோல சிந்தித்து, கிறிஸ்துவைப்போல செயல்பட்டு ஆவியின் சிந்தையில் வளர்ந்து ஆவியின் கனிகளைக் கொடுக்க நம்முடைய தேவன் உதவி செய்வாராக.

**Bro. V. PANNERDOSS**

# பாடம் - 7. பவுல் கைதி செய்யப்படுதல்

தொடர் கட்டுரை

அப்போஸ்தலனாகிய பவுல் மூன்று சுவிசேஷப் பயணங்களைக் கடல் மார்க்கமாகவும், தரைமார்க்கவும் சென்று விட்டு இப்பொழுது எருசலேமுக்குச் சென்றார். ஆவியிலே கட்டுண்டவராக எருசலேமுக்குச் சென்றார். அங்கே அவருக்கு அவருடைய உயிருக்கு என்ன ஆபத்து நேரிடுமோ என்று தெரியாதவராய்ச் சென்றார். ஆனால், நிச்சயம் யூதர்களால் ஆபத்து இருக்கின்றது என்று அறிந்திருந்தார்! (அப். 20:22,23).

பவுலும் அவரோடு ஊழியப்பயணங்களை மேற்கொண்டவர்களும் எருசலேமிலுள்ள சபையாரிடத்திற்குச் சென்றனர். அவர்களை சபையார் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டனர். பவுல் தமது ஊழிய விபரங்களைத் தெரிவித்தார். மறுநாளில் பவுல் தமது கூட்டாளிகளைக் கூட்டிக்கொண்டு இயேசுவின் சகோதரரான யாக்கோபினிடத்திற்குப் போனார். அங்கே மூப்பரெல்லாம் கூடி வந்தார்கள் (அப். 21:17,18) தேவன் தமது ஊழியப் பயணங்களில் கூட இருந்து புறஜாதிகளிடத்தில் செய்தவைகளையும் அவர்களின் கீழ்படிதலையும் விவரித்துச் சொன்னார். அதைக் கேட்ட மூப்பர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள். (அப். 21:19,20) அப்பொழுது பவுல் தாம் பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்திருப்பார். ஆனால், மூப்பர்கள் தொடர்ந்து பவுலிடம் கூறிய வார்த்தைகள் மூப்பர்களிடத்திலிருக்கும் வரை பாதுகாப்பு என்று நினைத்த பவுல் இப்பொழுது அதை மறந்திருப்பார்! ஏனென்றால், மூப்பர்கள் பவுலை நசரேய விரதம் இருந்த நான்கு பேர்களின் சடங்காச்சாரங்களுடன் இணைந்து கொள்ளும்படி கூறினார்கள். (அப். 21:20-24) இது தேவாலயத்திற்குள்ளே சென்று செய்யத்தக்கதாக இருந்தபடியால் அங்கே விசுவாசியாத யூதர்கள் இருப்பார்கள் அவர்களால் பவுலுக்கு நிச்சயம் ஆபத்து வரலாம்! என்று அவர் நினைத்திருப்பார். இருப்பினும் மூப்பர்களின் இந்தக் கட்டளையை எதிர்க்கவோ அல்லது முடியாது என்று சொல்லவோ அவர் விரும்பவில்லை. மூப்பர்களுக்குக் கீழ்ப்படிந்தார். அந்தப்படி இளைஞரே மூப்பருக்குக் கீழ்படியுங்கள் நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் (1பேதுரு 5:6). பவுல் அப்போஸ்தலனாக இருந்தும் மூப்பர்களுக்குக் கீழ்படிந்தார்.

மூப்பர்கள் பவுலுக்கு நன்மையே செய்யும்படி எருசலேம் தேவாலயத்திற்குள் சென்று சடங்காச்சாரங்களைச் செய்யும்படி கூறினார்கள் (அப். 21:4) பவுல் மூப்பர்களிடமிருந்த நான்கு பேரை அழைத்துக்கொண்டு நசரேய விரதச் சடங்குகளை செய்யும்படி தேவாலயத்திற்குள் சென்று சுத்திகரிப்பின் நாட்கள் ஏழு நாட்கள் நிறைவேறி வருகையில் ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அதாவது பவுல் எபேசுவில் மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்திருந்த போது பவுலின் பிரசங்கத்தை புறக்கணித்த யூதர்கள் (அப். 19:8,9) அவர்கள் பவுலை ஒழித்துக்கட்ட நினைத்தவர்கள் (அப். 20:18,19) அதே யூதர்கள் எருசலேம் தேவாலயத்திற்குள் பவுலைக் கண்டு அவன் மேல் கைபோட்டு (அப். 21:27) அதாவது இப்பொழுது கடைசியாக பவுலைத் தொலைத்துக்கட்ட வேண்டும் என்ற வெறியோடு கை போட்டனர். விசுவாசியாத யூதர்கள், புறஜாதியான எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே தேவாலயத்திற்கு வெளியே நகரத்தில் பவுலுடனே கூட இருக்கிறதைக் கண்டிருந்தார்கள் (அப். 21:29) இப்பொழுது பவுலுடன் தேவாலயத்திற்குள் வந்திருப்பானென்று நினைத்தார்கள்! ஆதலால், பவுலின் மேல் கைப்போட்டு இஸ்ரவேலரே உதவி செய்யுங்கள் நம்முடைய ஜனத்திற்கும், இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன் தான் இந்த தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும் கூட்டிக்கொண்டு வந்து இந்த பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள். (அப். 21:28).

இங்கே, யூதர்களுக்கு மூன்று விஷயங்கள் பரிசுத்தமானவைகளாக இருந்தன! அவை ஒன்று, அவர்களின் இனம் இரண்டு, அவர்களின் பிரமாணம் மூன்று, அவர்களின் தேவாலயம். பவுல் இந்த மூன்றையும் கனவீனப்படுத்தியதாகவும், அழித்துப்போட்டதாகவும் மற்றும் தீட்டுப்படுத்தியதாகவும் குற்றப்படுத்தினார்கள். இவ்வகைக் குற்றச்சாட்டுகள் அவர்களுக்குக் கைவந்த கலையாகும். இதேக் குற்றச்சாட்டை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு எதிராகச் சொன்னார்கள் (மாற்கு 14:56-64) மற்றும் ஸ்தேவானுக்கு எதிராகவும் இதே குற்றச்சாட்டைச் சொன்னார்கள் (அப். 6:11-14).

யூதர்களுடைய யூகமானது பவுலைக் கைது செய்யும்படி ஆனது! அவர்களின் உண்மையில்லாத யூகம் பவுலைக் குற்றப்படுத்தும்படியாக அமைந்தது! அன்பானவர்களே, நம்முடைய சொந்த யூகம் அநேகரைத் தவறாக நினைக்க வைக்கும். மேலும் நமது யூகம் மற்றவர்களைக் குற்றப்படுத்தும்படியாக இருக்கும்.

மேலும், நமது யூகம் தான் உபதேசக் காரியங்களை உதாசீனப் படுத்தும். " கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும், குமாரனையும் உடையவன் " (2யோவ 9) மேலும் ஞானி சாலமோன் கூறும் போது " மனுஷக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு அதின் முடிவோ மரண வழிகள் " (நீதி. 16:25) என்று குறிப்பிடுகிறார் எனவே, நமது யூகத்தினாலேயும், நமது பிடி வாதத்தினாலும் கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக் கொள்ளாமல் நமது வழியே சரியானது என்று நினைக்கிறோம். ஆனால், அது எவ்வளவு தவறானது என்பதை யோசித்துப்பாருங்கள்! பவுல் யூதர்களின் தவறான யூகத்தால் அவர் கைது செய்யப்படுகிறார் அதுவும் மரணத்திற்கேதுவான கைது செய்யப்பட்டார்.

பவுல் உண்மையிலேயே யூதர்களின் குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டவராக இருந்தார். எப்படியென்றால் அவர் நியாயப் பிரமாணத்தை முழுவதும் அறிந்திருந்தார். மேலும் அவர் நியாயப்பிரமாணத்தின்படி குற்றம் செய்யாதவர் (பிலி. 3:6) தேவாலயத்திற்குள் அந்நியரை அதாவது புறஜாதியாரை அழைத்து வரக்கூடாது என்று அறிந்து அதின்படி நடந்து கொண்டிருக்கிறார். ஆதலால் பவுல் யூதர்களின் குற்றச்சாட்டு களில் ஒன்றையும் செய்யவில்லை! பவுல் ஒரு குற்றமும் செய்ய வில்லை. அப்படி அவர் குற்றம் செய்திருந்தால் அவரையும், புறஜாதியான துரோப்பீமுவையும் ஸ்தேவானைப் போல தேவாலயத்திற்கு புறம்பே தள்ளி கல்லெறிந்திருப்பார்கள்! (அப். 7:58) ஆனால், அப்படியொன்றும் செய்யாமல் இஸ்ரவேலரே உதவி செய்யுங்கள் என்று யூதர்கள் மற்ற யூதர்கள் அழைத்தனர் (அப். 21:28).


அப்பொழுது நகர முழுவதும் கலக்கமுற்றது (அப். 21:30) பவுல் குற்றம் செய்திருந்தால் நகர முழுவதும் கலக்கமடைய வாய்ப்பில்லை! எனவே, பவுல் தவறு ஏதும் செய்யாமல் கைது செய்யப்பட்டார் என்பதே உண்மையாயிருக்கிறது! இப்படி நடக்கும்போது இவைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் " என்னி மித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களா னால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் " என்று கூறியிருக்கிறார் (மத். 5:11).


(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை**

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.




வேதாகம கருத்தரங்கில் திரண்டு இருந்தவர்கள்



Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.